முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை.

முன்னிலை- திரு. என்.காமராஜ், எம்.எல்.,

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,

2025 ஏப்ரல் 4-ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.எ.எண். 1/2025

இ.பி.எண். 154/2024

கோகிலவாணி ....மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

/எதிரிடை/

முத்தூட் பைனான்ஸ் (பி) லிட்,

அதன் மேலாளர் மூலம் ... எதிர்மனுதாரர் / மனுதாரர்/ வாதி

இந்த மனுவானது 18.03.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.கே.விக்னேஷ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.கே.ஆர்.லட்சுமணன் அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த வாதங்கள், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையின்கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

மனுதாரர் இந்த மனுவை அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய செய்துள்ள மனுவில் முடிவு எட்டப்படும் வரை நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 26 ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2) மனுவின் சுருக்கம்:-

இந்நிர் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. நிறைவேறுதல் மனுவில் எதிர்மனுதாரர். அசல் வழக்கை வாதி மனுதாரரிடம் இருந்து வர வேண்டிய பாக்கி தொகைக்காக தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அசல் வழக்கின் நடவடிக்கை குறித்து நிறைவேறுதல் மனு அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட பின்பு தான் மனுதாரருக்கு தெரிய வந்தது. அசல் வழக்கில் வேண்டும் என்றே மனுதாரரின் விலாசம் மறைக்கப்பட்டு ஒருதலைபட்ச தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. அசல் வழக்கில்

மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. ஆகையால் அசல் வழக்கில் மனுதாரர் ஆஜர் ஆகாதது வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல. அசல் வழக்கில் 12.2.23 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலை பட்ச தீர்ப்பை ரத்துசெய்ய மனு செய்துள்ளதால் அந்த மனுவின் முடிவு எட்டப்படும் வரை நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கையை நிறுத்தி வைத்து உத்தரவிட வேண்டும். இல்லாத பட்சத்தில் இந்நிர் மனுதாரருக்கு சொல்ல முடியா கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்.

<u>3) எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். ஒருதலை பட்ச தீர்ப்பை ரத்து செய்ய கூறியுள்ள காரணங்கள் எதுவும் ஏற்க கூடியதாக இல்லை. அழைப்பாணை முறையான முறையில் சார்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விலாசம் தவறானது என்றால் நிறைவேறுதல் மனுவில் அதே விலாசத்திற்கு எப்படி நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டது என்பதை மனுதாரரே கண்டிப்பாக நிருபணம் செய்ய வேண்டும். மனுதாரர் கொடுத்துள்ள ஆதார் விலாசத்திற்கு தான் அழைப்பாணை மற்றும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எதிர்மனுதாரரின் அலுவலர்கள் அடிக்கடி மனுதாரரின் வீட்டிற்கு வந்து செல்வதாக கூறியுள்ள போது வழக்கு பற்றி தெரியாது என கூறியுள்ளது வியப்பாக உள்ளது. மனுதாரர் செலுத்த வேண்டியுள்ள ரூ.7,09,682/ செலுத்துவதில் தப்புவதற்காகவும், நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கையை கால தாமதப்படுத்தும் நோக்கிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) இருதரப்பிலும் சாட்சிய சான்றவாணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில் மனு அனுமதிக்கதக்கதா? என்பதேயாகும்.

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை வாதி மனுதாரரிடம் இருந்து வர வேண்டிய பாக்கி தொகைக்காக தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கின் நடவடிக்கை குறித்து நிறைவேறுதல் மனு அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட பின்பு தான் மனுதாரருக்கு தெரிய வந்ததாகவும், அசல் வழக்கில் வேண்டும் என்றே மனுதாரரின் விலாசம்

மறைக்கப்பட்டு ஒருதலைபட்ச தீர்ப்பு பெறப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளதாகவும், அசல் வழக்கில் 12.2.23 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலை பட்ச தீர்ப்பை ரத்துசெய்ய மனு செய்துள்ளதால் அந்த மனுவின் முடிவு எட்டப்படும் வரை நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கையை நிறுத்தி வைத்து உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் ஒருதலை பட்ச தீர்ப்பை ரத்து செய்ய கூறியுள்ள காரணங்கள் எதுவும் ஏற்க கூடியதாக இல்லை என்றும், மனுதாரர் கொடுத்துள்ள ஆதார் விலாசத்திற்கு தான் அழைப்பானை மற்றும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரரின் அலுவலர்கள் அடிக்கடி மனுதாரரின் வீட்டிற்கு வந்து செல்வதாக கூறியுள்ள போது வழக்கு பற்றி தெரியாது என கூறியுள்ளது வியப்பாக உள்ளதாகவும், மனுதாரர் செலுத்த வேண்டியுள்ள ரூ.7,09,682/ செலுத்துவதில் தப்புவதற்காகவும், நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கையை கால தாமதப்படுத்தும் நோக்கிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

உண்மையில் அசல் வழக்கில் மனுதாரருக்கு தவறான விலாசத்திற்கு அழைப்பானை அனுப்பப்பட்டதாக கூறியுள்ள போதும் உண்மையான விலாசம் எது என்று எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கொடுத்த ஆதார் விலாசத்திற்கு தான் அழைப்பானை அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டதை மறுத்து மனுதாரர் தரப்பில் எந்த மாற்று சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் செய்யவில்லை. ஆக பொய்யான காரணங்கள் கூறி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது நிருபணம் ஆகிறது. மேலும் அசல் வழக்கு 2020 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தற்போது வரை அசல் வழக்கில் கூட ஆஜராகமல் இருந்து கொண்டு தற்போது சுத்த கரமின்றி தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதிக்கும் பட்சம் எதிர்மனுதாரருக்கு தான் வீண் மனஉளைச்சல் மற்றும் பொருள் இழப்பு ஏற்படக்கூடும் என்பதால் இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின் பொருட்டு அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் 2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KAMARAJ NATARAJAN

Digitally signed by KAMARAJ NATARAJAN
Date: 2025.04.23 11:53:35 +0530

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி

மதுரை

இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் இல்லை:-

KAMARAJ NATARAJAN

Digitally signed by KAMARAJ NATARAJAN
Date: 2025.04.23 11:53:26 +0530

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி

மதுரை

| |
|---|
| முதலாவது கூடுதல் சார்பு |
| நீதிமன்றம், மதுரை |
| **EA.1-25 in EP.No.154**/2024 |
| சீரான / வரைவு உத்தரவு |
| நாள்- 04-4-2025 |